The HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) A sum of Rs. 5,24,431.76 was covered by the award No. 1 of 1967, dated 19th July 1967 of the R.D.O. Out of this amount, a sum of Rs. 4,13,016.95 was disbursed direct to the land owners and through the Court. Since some of the land owners preferred claims for high compensation under section 18 of the Land Acquisition Act, a sum of Rs. 1,10,323·54 was deposited into the Court and a sum of Rs. 1,091.27 as Revenue Deposit.

திரு. செ. அரங்கநாயகம்: கோவை மேற்கு தொகுதியிலே இது போன்று பொன்னைய ராஜபுரம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே குடிசைகள் இருக்கின்றன. ஆனால், அந்த இடத்தின் சொந்தக்காரரர் அவர்களை எல்லாம் வெளியேற்றி இருப்பதால் அதையும் ஹவுசிங் போர்டு எடுத்துக் கொள்ளுமா? அல்லது நகரத்திலே இருக்கின்ற இது போன்ற பகுதிகளை எல்லாம் நகர சொத்துக்கள் உச்ச வரம்பு மசோதாவின்படி தற்பொழுதிருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டே சர்க்கார் எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பொன்னைய ராஜபுரத்தைப்பற்றி தனிக் கேள்வி போடவும்.

Houses for Freedom Fighters

*695 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct houses for aged and infirm Freedom Fighters in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) மதுரை நகரில் வாழும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சங்க உறுப்பினர்களுக்கு சிறப்பு மலிவு வீட்டு வசதி திட்டத்தின் கீழ், நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிதி உதவியுடன் 170 வீடுகளைக் கட்டும் செயற்குறிப்பு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இது ஜில்லா வாரியாகக் கொடுக்கப்படுமா? இதற்காக எவ்வளவு பணம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த வீடுகள் கட்டுவதற்காக ஹட்கோ என்ற நிறுவனத்திடமிருந்து பணம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனத்திலே தற்பொழுது பணம் இல்லை. ஆகவே, படிப்படியாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வசதி இருக்கிறது. தற்பொழுது சொல்லிய திட்டத்தை முடித்துத் தர பணம் வேண்டும் என்று மாநிலத்திலே இருக்கிற வீட்டு வசதி வாரியம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே ஹட்கோவிலிருந்து பணம் இல்லை என்ற விஷயத்தைச் சொன்னார்கள். மலைப்பிரதேசத்திலே இருக்கின்ற மாவட்டங்களிலாவது முன்னுரிமை கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மலைப்பிரதேசங்களிலே இருப்பவர்களுக்கு சிரமங்கள் அதிகம் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும் நம் நிலைமை பணப் பற்றாக்குறைதான். எனவேதான், எல்லாப் பகுதிகளுக்கும் இந்த வசதிகளை விஸ்தரிக்க சிரமம் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தியாகிகளுக்கு இது வரையில் எந்த மாவட்டத்திலே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன? அடுத்தாற்போல் எந்த மாவட்டத்திலாவது அவர்களுக்கு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தியாகிகள் இப்பொழுது தான் வீடுகள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். வீடுகள் கட்டுவது பற்றிய வேலை தொடங்கவில்லை. இனி எவ்வளவு பேர் அப்படி கேட்க இருக்கிறார்கள் என்று அறிந்த பிறகுதான் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முடியும்.

திரு. வி. பழனிவேலு: தலைவரவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எப்படி வீடுகள் வழங்கப்படவிருக்கின்றனவோ, அதே போல் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலே ஈடுபட்ட அந்தத் தியாகிகளுக்கும் வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எல்லோருக்கும் வீடு கட்டித்தர அரசு தயாராக இருக்கிறது. அரசாங்கம் இனமாக வீடு கட்டித் தருவதில்லை. துட்டு கொடுத்தால் தான் வீடு என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தமிழகத்திலே இப்படி சக்தியற்ற, திறனற்ற அரசியல் தியாகிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய சென்சஸ் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஏதாவது

1975 ஏப்ரல் 16]

கணக்கு இருந்தால்தான் அப்படி ஒரு திட்டம் போடமுடியும். அப்படி எடுக்கவில்லை என்ருல் அதை எடுத்து, அவர்களுக்கு ''ஃபேஸ்டு புரகிராம்'' அடிப்படையில் வீட்டு வசதி கிடைக்க அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதிலேயும் முழுக்க, முழுக்க அவர்களேயே பணம் போட்டுக் கொள்ளச் சொல்லாமல் இருக்க வேண்டும். அவர்கள் வாழ முடியாத நிலைமையில் இருப்பதால் தான் அவர்களுக்கு அரசாங்கம் பென்ஷன் கொடுக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஓரளவிற்காவது மானியம் வழங்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், அவர்களுடைய கணக்கை எடுத்து ''ஃபேஸ்டு புரகிராம்'' அடிப்படையிலே வீடுகளை அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அரசுமுன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்திற்கு கணக்கு எடுக்கின்ற வேலை அநேகமாக இல்லை. யார் விண்ணப்பம் கொடுத்தாலும் அவர்களுக்கு வீடு கட்டித் தரும் வேலையைத்தான் மேற்கொண்டிருக்கிருேம். இதை அரசே தன்னிச்சையாகச் செய்யும் வேலையாக உறுப்பினர் அவர்கள் கருதுகிருர்கள். தியாகிகளுக்குத்தான் பென்ஷன் தருகிருேம். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 10 சதவிகித பணத்தை முன்ஞல் செலுத்திஞல் 13,000 ரூபாய் மதிப்புள்ள வீட்டினைக் கட்டித் தருகிருேம். இந்தத் திட்டம் வீட்டு வசதி வாரியத்திஞல் அளிக்கப்பட்டு, அது நாடெங்கும் நடைபெற்று வருகிறது. அதிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கேற்ற தியாகிகளாஞலும் அல்லது காங்கிரஸ் தியாகிகளாஞலும் வீடு கட்டிக் கொள்ள முன் வருவார்களேயாஞல் அவர்களுக்கு அப்படி கட்டித்தர அரசு தயாராக இருக்கிறது.

சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை அலுவலகம்

*696 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா:

சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை உதவி டைரக்டர் அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : ஆம்.

மீன் பதப்படுத்தும் நிலையங்கள்

*697 விஞ.—திரு. த. சோனையா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—